# ஸதாசார்ய லக்ஷண வைபவம்

- ஸ்ரீ உ.வே. ப்ர.ப. ராஜஹம்ஸம் ஸ்வாமி

அனாதி வைதிக ஸித்தாந்தமான ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் முக்கியமாகக் கொண்டாடப்படுவது மூன்று விஷயங்கள். அவையாவன : ப்ரமாணம், ப்ரமேயம், ப்ரமாதாக்கள் முதற் ப்ரமாணமான வேதமும், அதை தெளிவுபடுத்தப் பிறந்த திவ்யப்ரபந்தமுமே நம் தர்சனத்திற்கு முக்ய ப்ரமாணங்கள். இதனால் கொண்டாடப்படும் திவ்ய தேசங்களே ப்ரமேயம். இதை நமக்குக் காட்டித் தந்த ஆழ்வாராசார்யர்களே ப்ரமாதாக்கள். அவ்வரிசையிலே நம் தர்சனத்தை தங்களுடைய உபதேசங்களாலும், எழுத்துக்களினாலும் காத்த குணவாளர்கள் ப்ரமாதாக்களே. அன்னவர்களுள் ஸதாப்தி மஹோத்ஸவம் கண்டருளும் ஸ்ரீ. உ.வே. வித்வான் காரப்பங்காடு ஸ்வாமியின் இடமானது தனித்தன்மையுடன் கூடியது. இச்சீரிய மலரிலே இவ்வருடத்தில் 800-வது திருநட்சத்திர வைபவம் கண்டருளும் பிள்ளையுலகாசிரியரின் பதினெட்டு ரஹஸ்யங்களுக்குள் மிகச் சிறந்ததாகக் கொண்டாடப்படும் ஸ்ரீவசனபூஷண திவ்ய சாஸ்த்திரத்தில் ஆசார்ய வைபவ ப்ரகரணத்தில் சில வார்த்தைகள் எழுதி ஸத்தைப் பெற எண்ணுகிறேன். காரணம், தேவப்பெருமாளின் அபராவதாரம் பிள்ளைலோகாசாரியார் என்பது வெள்ளிடைமலை. தேவப்பெருமாளே அபீஷ்டவரதனாக தக்ஷிண நைமிசாரண்யம் எனப் போற்றப்படும் காரப்பங்காட்டில் அருள்பாலித்து வருகிறார். அப்படிப்பட்ட அந்தேவப்பெருமாளின் மனதும் இக்கட்டுரையினால் ஸந்தோஷிக்கும் என எண்ணுகிறேன்.

ஸ்ரீ வசன பூஷணத்தில் ஆறு ப்ரகரணங்களாக பிரிக்கப்படும் க்ரமத்தில் 4-வது ப்ரகரணமாக ஆசார்யவைபவ ப்ரகரணம் பேசப்படுகிறது. அதற்கு முன்பு அதிகாரி நிஷ்டையைப் பற்றி பேசின ப்ரகரணத்தில் எல்லாவிதமான ஜ்ஞான அனுஷ்டானங்களுடன் கூடிய ஆசார்யனை அடைந்து தன்னுடைய நீசத்வத்தையும் தெரிவித்து அதனால் மந்த்ரோபதேசத்தைப் பெற்று உய்வு பெற எண்ணின சிஷ்யனையும் அதனால் ஏற்படும் பலத்தையும் ஆசார்யனான தன்னையும் வேறுவிதமாக நினைப்பது மிகவும் கொடியது. அதை அடியோடு விலக்கவும் வேணும். அவ்வாறு விலக்காமல் இருந்தால் நாம் உய்வுபெற முடியாது. கெட்டழிந்துவிடவே நேரும்.

அவ்வாறான கேடு இல்லாமல் நாம் நன்றாக இருக்க வேண்டிய நிலையை தெளிவுபடுத்துகிறார் மேல் வரும் விஷயத்தினாலே. அதாவது எம்பெருமானுடைய அருளினால் நமக்குக் கிடைத்திருக்கும் நிலையை எவ்வாறு எண்ண வேண்டும் என்றால், தானும் ஆசார்ய பாரதந்த்ரன் என்பதாகவே எண்ணிக் கொண்டிருக்க வேணும். அவ்வாறில்லாமல் நம்மிடத்தே வந்த சிஷ்யனைக் கண்டு இவனுக்கு நாமே ஆசார்யன் என்கிற எண்ணமும் இவன் நமக்கே சிஷ்யன்

என்கிற எண்ணமும் வரக்கூடாது. இச்சிஷ்யனும்கூட நம் ஆசார்யனுடைய மாணாக்கனே என எண்ண வேணும். இவரை திருத்தியதும் தன்னுடைய சௌகர்யா சௌகர்யங்களுக்கு உபயோகப்படுத்துவதற்காக அல்ல. இவர் மூலமாக என்ன லாபம் கிடைக்கும் என்பதற்காகவும் அல்ல. எம்பெருமானுடைய குணவைபவமான மங்களாஸாஸன பரதந்த்ரராக ஆக்குவதற்காகவே அன்றி மற்றொன்றுக்காக அல்ல. திருநந்தவனம் வைத்து புஷ்பங்களை எம்பெருமானுக்கு ஸமர்ப்பித்ததைவிட சேதனனைத் திருத்தி எம்பெருமான் திருவடிவாரத்திலே கைங்கர்ய ப்ரதனாக ஆக்குவதே அவன் மனம் குளிரச் செய்யும். இவ்வாறான நிலையில் உள்ள பெரியோர்களோடு சேர்ந்து வாழ்தலே நம் உபதேசத்திற்கு பலித்த பலமாக எண்ண வேணும்.

இவ்வாறான எண்ணம் நமக்கு ஏற்பட்டால் அதன் மூலமாக கிடைக்கும் பலிதங்கள் நான்கு வகை. அவை :- (1) நமக்குக் கிடைத்த ஆசார்யனுடைய கைங்கர்யங்களை பண்ணுவதனால் ஏற்படும்படியான புண்யமும், (2) எம்பெருமானுடைய முக மலர்த்தியை உண்டாக்கும்படியானது சேதனனைத் திருத்தி அவன் மூலமாக பண்ணும்படியான பகவத் கைங்கர்யமும், (3) நெடுநாட்களாக அசைவதும் அசையாததுமாக இருக்கும் வஸ்துக்களை தன்னுடையதாகவே எண்ணிக்கொண்டு வந்த இச்சிறியவனை எந்தவொரு காரணமும் இல்லாமல் தன்னுடைய முயற்சியினாலேயே திருத்திப் பணிகொண்டு பகவத் கைங்கர்யத்திற்கு உரியவனாக ஆக்கின மஹோபகாரமும், (4) இவ்வாறான உபகாரத்தை நமக்குச் செய்து போந்த ஆசார்யனை ஒரு நிமிடமும் விட்டுப் பிரியாமல் இருக்கும் ஸகவாஸமும் கிடைக்கும். ஏனென்றால் ஆசாரியன் உள்ளவரையே அவரிடத்திலிருந்து விஷயங்களும் அவருடைய கைங்கர்யங்களையும் பண்ண முடியும்.

இப்படி பெருமையுடைய சிஷ்யன் விஷயத்திலே வேறு எந்தவிதமான அபிப்பிராயமுமில்லாமல் அவனுடைய உயர்த்தியையே முக்யமாகக் கொண்டு உபதேசித்து வந்தால் நாளடைவில் நன்றாகத் திருந்தி பகவத் கைங்கர்யம் செய்ய ஆரம்பிப்பார். இதனால் சிஷ்ய லக்ஷணம் பலிக்கும். இவ்வாறான கைங்கர்யத்தைப் பெற்று உகக்கும் எம்பெருமானே இச்சேதனனுக்குத் தகுந்த ஆசார்யன் இவரே என எண்ணுவதனால் ஆசார்யத்வமும் உண்டாகிறது. இந்நிலையிலில்லாமல் பல்வேறு விஷயங்களை பல்வேறுவிதமாக நாம் உபதேசிக்கப் போந்தால் அவருக்கு ஆசார்ய லக்ஷணம் பறிபோய்விடும். அவ்வாறான விஷயங்களை சிஷ்யர்கள் கேட்க எண்ணினால் சிஷ்ய லக்ஷணமும் பறிபோய்விடும்.

மேலும் "ஆவாரார் துணையென்று அலை நீர்க்கடலுள் அழுந்தும் நாவாய் போல் பிறவிக் கடலுள் நின்று நான் துளங்க" என்கிற க்ரமத்திலே துக்க சாகரத்திலே மூழ்கியிருக்கும்போது "கரக்ரஹ விசக்ஷணோ ஐயது லக்ஷ்மணோயம் முனி:" என்கிறபடி ஸம்ஸார ஸமுத்திரத்திலிருந்து நம்மைக் காப்பாற்ற எண்ணியும் ஐயோவென இரங்கி நல்லுபதேசம் செய்வதற்கு உண்டான க்ருபையும் ஆசார்யனுக்குத் தேவை. உபதேசிக்கும்போது தானே உபதேசிப்பதாக எண்ணாமல் ஸ்வாசார்ய பரதந்த்ரனாகவே உபதேசிக்கிறேன் என்கிற எண்ணமும் ஏற்படவேணும்.

அவ்வாறான ஆசார்யன் உபதேசிக்கும் மந்திரமே நமக்கேற்பட்ட ஸம்ஸார ஸம்பந்தத்தை போக்கடிக்கும் மருந்தாகும். அம்மருந்தே திருவஷ்டாக்ஷர மஹாமந்த்ரம் எனப் பேசப்படுகிறது.

இவ்விடத்தில் எட்டெழுத்து மந்த்ரம் என்று சொன்னதாக இதன் விவரணமான த்வய, சரம ச்லோகங்களையும் சொல்லுபவரே நமக்கு நேரான ஆசார்யன் என்கிறதும் ஏற்படும். இம் மந்திரங்களினால் மறுபிறப்பு தீர்ந்து நித்ய கைங்கர்யமே போதுபோக்காகும்படியான பெருமையைப் பெறமுடியும். இம்மந்திரங்களை விட்டு ''புனரபி ஜனனம் புனரபி மரணம்'' என்கிற விநத்திலே ஸம்ஸாரத்தை மேலும் மேலும் வளர்ப்பதற்கு காரணமாகவும் தள்ளத்தகுந்த பலன்களைத் தரும்படியான மந்த்ரங்களைச் சொல்லுபவர்க்கு ஆசார்யத்வ பூர்த்தி இல்லை. அவ்வாறில்லாமல் திருமந்த்ர, த்வய, சரமச்லோக மந்த்ரங்களை நமக்கு உபதேசிக்கும் க்ருபாமாத்ர ப்ரசன்னாசார்யர்களான ஆசார்யர்களை அணுகி அவர்கள் மூலமாக உபதேசத்தைப் பெறுவதே ''அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது'' என்கிற மனுஷ்ய ஜன்மத்திற்கு முக்ய ப்ரயோஜனமாகும்.

குறிப்பாக இக்கட்டுரை எழுதத் தூண்டியதற்கு காரணம் அடியேனுடைய சிறு ப்ராயத்தில் சென்னை மாநகரிலே கோவிந்தப்ப நாயகன் வீதியின் உள்ள சென்ன கேசவப் பெருமாள் வஸந்த மண்டபத்தில் ஸ்ரீ உ.வே. காரப்பங்காடு ஸ்வாமியின் திருப்பாவை சொற்பொழிவினை கேட்கும் பாக்யம் ஏற்பட்டது. அதில் ''எல்லேயிளங்கிளியே' பாசுரத்தன்று ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணத்தையும், ஆசார்ய லக்ஷணத்தையும் தெரிவித்ததை நினைவு கூர்ந்து இவ்விஷயத்தை எழுத எண்ணினேன்.

அன்றும் இன்றும் அறிவில் குறைவாளன். ஜன்ம சாபல்யத்திற்காகவே எழுதப்பெற்றது. குற்றங்குறைகளைப் பெரியோர்கள் பொருத்தருள வேணும்.

> லோகத்திலே யாருக்கும் தர்மங்களைச் செய்ய வேண்டும் என்கிற ச்ரத்தை இல்லை. தர்மத்தைப் பற்றிய சிந்தனையே இல்லை. இதனால் இவர்கள் புஜிக்கிற பதார்த்தங்களில் சக்தி குறைகிறது; ஆயுஸ்ஸும் குறைகிறது; பகவதநுக்ரஹமாகிற அத்ருஷ்டமும் குறைகிறது. வேதத்தில் சொல்லப்பட்டுள்ள தர்மங்களை எல்லோரும் ஸுலபமாக அறிந்து பயன் பெறுவதற்காக மஹர்ஷிகள் இதிஹாஸ புராணங்களையும் தர்ம சாஸ்த்ரங்களையும் அருளிச்செய்திருக்கிறார்கள்.
>
> \- காரப்பங்காடு ஸ்வாமி